பக்கங்கள் 19+8

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | ஆவணி 07 வெள்ளிக்கிழமை 23.08.2024 | அதிர்வு 22


## கட்டட வேலையில் ஈடுபட்ட தொழிலாளி சடலமாக மீட்பு

### கிளிநொச்சியில் சம்பவம்

கிளிநொச்சி, இரத்தினபுரம் பகுதியில் கட்டட வேலையில் ஈடுபட்டு வந்த தொழிலாளர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

04


‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்




# தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் ரணிலுக்கு ஆதரவு வழங்குவர்!

## இப்படி டக்ளஸ் நம்பிக்கை

(எஸ்.நிதர்ஷன்)

நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எனது நண்பர்களான சக தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் ஆதரவு வழங்குவார்கள் என்ற நம்பிக்கை இருக்கின்றது என்று ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் அபிவிருத்தி நிதி வாங்கிய தமிழ்க் கட்சிகளின் எம்.பிக்கள் பலர் தமிழ்ப் பொது வேட்பாளருக்கு ஆதரவு தெரிவித்துள்ள நிலையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்குவார்களா எனக் கேட்ட போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

04

# அங்கஜன் உள்ளிட்ட சுதந்திரக் கட்சியின் மேலும் இரு எம்.பிக்கள் ரணிலுக்கு ஆதரவு

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் இரு முக்கியஸ்தர்கள் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கவுள்ளனர் என்று அறிவித்துள்ளனர்.

அதன்படி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உப தலைவரும் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான அங்கஜன் இராமநாதன் மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் பதில் பொதுச் செயலாளரும் கேகாலை மாவட்ட நாடாளுமன்ற

04








# தமிழ்ப் பொது வேட்பாளர் அரியநேத்திரனின் “நமக்காக நாம்” பரப்புரைப் பயணம் ஆரம்பம்

தமிழ்ப் பொது வேட்பாளரின் “நமக்காக நாம்” தேர்தல் பிரசாரப் பயணம் இன்று காலை யாழ்ப்பாணம், வடமராட்சி, சக்கோட்டை – கொடி முனையில் இருந்து ஆரம்பமானது. தமிழ்ப் பொது வேட்பாளர் பாக்கிய செல்வம் அரியநேத்திரன் உள்ளிட்ட குழுவினர் பிரசாரத் துண்டுப் பிரசுரங்களை விநியோகம் செய்தனர்.

(படங்கள்:- எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)














# குடும்பஸ்தர் அடித்துப் படுகொலை!

வீடொன்றில் வைத்து குடும்பஸ்தர் ஒருவர் அடித்துப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் ஆனமடு, ஹல்மில்லய பிரதேசத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்றுள்ளது.

63 வயதுடைய நபரே இவ்வாறு தாக்கப்பட்டு உயிரிழந்துள்ளார் என்று ஆனமடு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபர்கள் இதுவரை அடையாளம் காணப்படவில்லை.

அவர்களைக் கைது செய்வதற்கான விசாரணைகளை ஆனமடு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.






# 2005 இல் எடுத்த தவறான முடிவை தமிழர்கள் இம்முறை சரி செய்வர்!

## முன்னாள் அமைச்சர் தலதா நம்பிக்கை

”2005 ஆம் ஆண்டு இழைத்த தவறை வடக்கு, கிழக்கு மக்கள் மீண்டும் இழைக்கமாட்டார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது. அன்று ஜனாதிபதித் தேர்தலை அம்மக்கள் புறக்கணித்தால்தான் ரணில் விக்கிரமசிங்க தோற்றார்.” – என்று முன்னாள் அமைச்சர் தலதா அத்துகோரள தெரிவித்தார்.



இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:-

“1950 களில் பண்டாரநாயக்க ஐக்கிய தேசியக் கட்சியை விட்டு வெளியேறினார். ஆனால், கட்சி பலவீனமடையவில்லை. 1991 இல் லலித் மற்றும் காமினி திஸாநாயக்க ஆகியோர் ஐ.தே.கவைவிட்டு வெளியேறி புதிய கட்சியை ஸ்தாபித்தனர். அப்போதும் ஐக்கிய தேசியக் கட்சி பின்னடைவைச் சந்திக்கவில்லை.எனினும், சஜித் பிரேமதாஸ தலைமையில் நாம் வெளியேறிய பின்னரே கட்சி பிளவைச் சந்தித்தது. அவ்வாறானதொரு முடிவை எடுத்திருக்கக்கூடாது என்று தற்போது தோன்றுகின்றது. பிரதான கட்சியை உடைத்துவிட்டோமே என்ற மனக்கவலை இன்னும் உள்ளது.

1994 ஜனாதிபதி தேர்தலின் போது காமினி திஸாநாயக்க படுகொலை செய்யப்பட்டார். அதனால் கட்சி தோற்றது. பின்னர் 1999 ஜனாதிபதித் தேர்தலில் கடைசி பிரசாரக் கூட்டத்தின்போது சந்திரிகா குண்டு தாக்குதலுக்கு இலக்காகிக் கண்ணை இழந்தார். இறுதியில் அனுதாப வாக்குகளால் வெற்றி பெற்றார்.

2005 இல் ராஜபக்ஷ குழுவின் சூழ்ச்சிக்குள் சிக்கி அப்பாவி வடக்கு, கிழக்கு மக்களின் வாக்குகளைப் புறக்கணிக்கச் செய்தனர். இதனால் ரணில் தோற்றார். வடக்கு, கிழக்கு மக்கள் வாக்களித்திருந்தால் ரணில் அன்று நிச்சயம் ஜனாதிபதியாகி இருப்பார். எனவே, ரணில் விக்கிரமசிங்க போட்டியிட்ட இரு தடவைகளிலும் அவர் இயல்பாகவே தோல்வியைச் சந்திக்கவில்லை. அதற்கான சூழ்நிலைகள் உருவாக்கப்பட்டுள்ளன.

எனினும், 2005 இற்கு பின்னரான காலப்பகுதியில் வடக்கு, கிழக்கு மக்கள் தமது வாக்குகளை எமது முகாமுக்கே வழங்கி வருகின்றனர். எனினும், தற்போது சஜித்தும், ரணிலும் பிரிந்து நிற்பதால் எவருக்கு வாக்களிப்பது என்ற பிரச்சினை உருவாகியுள்ளது. இதன் உண்மைத்தன்மை செப்டெம்பர் 22ஆம் திகதியே தெரியவரும்.” – என்றார்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### கட்டட வேலையில்...

மேல் மாடி கட்டடத்தின் இரண்டாம் மாடியில் நேற்று வியாழக்கிழமை இரவு இருவர் வெல்டிங் வேலை செய்து கொண்டிருந்த நிலையில் ஒருவர் நித்திரைக்குச் சென்றிருந்தார்.இந்நிலையில், மற்றவர் வேலை செய்து கொண்டிருந்தார்.

நித்திரைக்குச் சென்றவர் அதிகாலை எழுந்து வேலை செய்து கொண்டிருந்தவரைக் காணாது தேடியபோது அவர் சடலமாகக் கீழே காணப்பட்டார்.

யாழ்ப்பாணம், ஊர்காவற்றுறையைச் சேர்ந்த 34 வயதுடைய சின்னாண்டி பரமேஸ்வரன் என்ற ஒரு பிள்ளையின் தந்தையே உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

### அங்கஜன் உள்ளிட்ட...

உறுப்பினருமான சாரதி துஷ்மந்த மித்ரபால எம்.பி. ஆகியோரே ரணிலுக்குத் தமது ஆதரவை வழங்குகின்றனர் என்று தெரிவித்துள்ளனர்.

மேற்படி இருவரும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைக் கொழும்பு, பிளவர் வீதியிலுள்ள அரசியல் அலுவலகத்தில் இன்று முற்பகல் சந்தித்து எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் அவரின் வெற்றிக்காகத் தம்மை அர்ப்பணிகின்றனர் என்று உறுதியளித்துள்ளனர்.

### தமிழ்க் கட்சிகளின்...

அவர் மேலும் தெரிவிக்கையில், “பொருளாதார ரீதியில் சரிந்து கிடந்த நாட்டை தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வளர்ச்சிப் பாதைக்குக் கொண்டு செல்கின்றார்.

நாடு பொருளாதார ரீதியில் சரிந்து கிடந்த போது யாரும் நாட்டைப் பொறுப்பேற்க முன்வராத நிலையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனி ஒருவராக நாட்டைப் பொறுப்பேற்று ஏனைய கட்சிகளுடன் இணைந்து நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்கின்றார்.

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியினராகிய நாம் ஜனாதிபதித் தேர்தல் அறிவிப்பு வெளியாகியவுடனே ரணில் விக்கிரமசிங்கவுக்கே எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் ஆதரவு வழங்குவோம் எனக் கூறிவிட்டோம்.

தற்போது அநேகமான தமிழ், சிங்கள, முஸ்லிம் கட்சிகள் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கி வரும் நிலையில் எனது சக நண்பர்களான தமிழ்க் கட்சிகளும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கும் என நம்புகின்றேன்.

சக தமிழ்க் கட்சிகள் மக்களுக்கான அபிவிருத்தியை மேற்கொள்வதற்காக பல கோடி ரூபாய்களை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வழங்கியமை அனைவருக்கும் தெரிந்த விடயம்.

எமது அரசியல் பிரச்சினைக்குத் தீர்வு காணும் சமதளத்தில் மக்களின் அபிவிருத்தியை மேற்கொள்ள வேண்டும் என்ற தமிழ்க் கட்சிகளின் நம்பிக்கையை நான் வரவேற்கின்றேன்.

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி தமிழ் மக்களின் அரசியல், அபிவிருத்தி, அன்றாடப் பிரச்சினையை எமது குறிக்கோளாக அன்று தொடக்கம் இன்று வரை வலியுறுத்தி வருகின்ற ஒரே கட்சி.

அதுமட்டுமல்லாது தமிழ் மக்களின் அரசியல் தீர்வுக்கு 13 ஆவது திருத்தம் ஆரம்பப் புள்ளியாக அமைய வேண்டும் என வெளிப்படையாகவே கூறிய கட்சி எமது கட்சி.

துரதிஷ்டவசமாக சக தமிழ் கட்சிகள் தாயகம், தேசியம், ஒரு நாடு இரு தேசம் என்றெல்லாம் கூறி மக்களைப் பாரிய துன்பத்துக்கு உள்ளாக்கியமை வரலாறு.

அந்த வரலாற்றைக் கடந்து தற்போது தமிழ் கட்சிகளும் நாங்கள் ஏற்கனவே வலியுறுத்திய 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் எனக் கோரிக்கை முன் வைக்கின்றன.

அவர்களின் கோரிக்கை காலம் கடந்த ஞானமாக இருந்தாலும் தற்போதாவது சரியான ஒரு அரசியல் பாதைக்கு வருவதை விட்டு வரவேற்கின்றேன்.

அதேபோல் தமிழ்க் கட்சிகள் தமிழ்ப் பொது வேட்பாளர் என ஒருவரை நிறுத்தி தமிழ் மக்களை வாக்களிக்குமாறு கோரிக்கை விடுத்திருக்கின்றார்கள்.

தமிழ்ப் பொது வேட்பாளர் விடயம் தமிழ் அரசியல்வாதிகளுக்கு நன்மை பயத்தாலும் தமிழ் மக்களுக்கு நன்மை பயக்காது என்பது அதனை ஏற்படுத்தியவர்களுக்கு நன்கு தெரியும்.

தற்போதுள்ள சூழ்நிலையில் நாட்டை வழிநடத்தக்கூடிய ஆளுமை மிக்க தலைவராக ரணில் விக்கிரமசிங்கவே உள்ளார்.

ஆகவே, அவரது செயற்பாடுகளை முன்னோக்கிக் கொண்டு செல்வதற்குச் சக தமிழ்க் கட்சிகளின் தலைவர்களும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு தமது ஆதரவை வழங்குவார்கள் என நம்புகின்றேன்.” – என்றார்.

# இரண்டு படகுகள் நேருக்கு நேர் மோதிய விபத்தில் இருவர் மாயம்



இரண்டு சுற்றுலாப் படகுகள் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் இருவர் காணாமல்போயுள்ளனர்.

அளுத்கம, பெந்தர ஆற்றில் நேற்று வியாழக்கிழமை மாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அளுத்கமவில்உள்ளசுற்றுலாஹோட்டல் ஒன்றில் பணி முடிந்து ஆட்களை ஏற்றிச் சென்ற படகும் பெந்தர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சுற்றுலாப் படகுமே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளன.

இந்த விபத்தில் பெந்தர சுற்றுலா விடுதியொன்றில் இருந்த இருவரே காணாமல்போயுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

காணாமல்போனவர்களைக் கண்டறிவதற்கான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதுடன், சம்பவம் தொடர்பில் கடற்படையினருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் அளுத்கம மற்றும் பெந்தர பொலிஸ் நிலையங்களின் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# யாழ்ப்பாணத்தில் காய்ச்சலால் ஒரு வயது குழந்தை உயிரிழப்பு

யாழ். தம்பாட்டி, ஊர்காவற்றுறை பகுதியைச் சேர்ந்த பிரேமநாத் நிஹாரிகா என்ற ஒரு வயது குழந்தை காய்ச்சல் காரணமாக உயிரிழந்துள்ளது.

மேற்படி குழந்தைக்கு நேற்றுமுன்தினம் பிற்பகல் வேளையில் காய்ச்சல் ஏற்பட்டது. உடனே அந்தக் குழந்தை யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டது. இருப்பினும் அந்தக் குழந்தை சிகிச்சை பலனின்றி நேற்றுமுன்தினம் இரவு 11 மணியளவில் உயிரிழந்தது.

குழந்தையின் சடலம் மீதான மரண விசாரணைகளைத் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார்.

காய்ச்சல் காரணமாக மரணம் சம்பவித்துள்ளதுஎன்று உடற்கூற்றுப் பரிசோதனைகளில் தெரியவந்துள்ளது.


# நினைவகலா நினைவுகள்



பிறப்பு 21 * 10 * 1937

இறப்பு 23 * 08 * 2012

**இந்திரராசா செங்காரபிள்ளை**
(சங்கர்)



பிறப்பு 11 * 02 * 1936

இறப்பு 29 * 08 * 2009

**செங்காரபிள்ளை பூரணபாக்கியம்**

நேற்று வரை எம்முடன் வாழ்ந்தீர்கள் என்றே
உள்ளத்து உணர்வலைகள்
ஆசையுடன் அசைபோடுகின்றன - என்றாலும்
உங்கள் ஆத்மா சாந்திபெற
இறைவனை இறைஞ்சி அஞ்சலிக்கின்றோம்.

505, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# ரணிலின் அபத்தம்

மக்களை 'முட்டாள்கள்' - 'மாங்காய் மடையர்கள்' என்று எண்ணிக் கொண்டு காரியமாற்றுகின்றனர் போலும் நாட்டின் தலைவரும் அவரின் அணியினரும்.

ஜனாதிபதித் தேர்தலை ஒட்டி அவர்கள் ஆற்றி வரும் காரியங்கள் அத்தகைய எண்ணத்தைத்தான் நமக்குத் தந்து நிற்கின்றன.

ஏற்கனவே உள்ளூராட்சி மன்ற தேர்தல்களை ஒன்றரை ஆண்டுகள் நடக்க விடாமல் முடக்கியமை மூலம் வாக்காளர்களின் அடிப்படை உரிமைகளை மீறியவர்தான் இந்த ஜனாதிபதி என்று நாட்டின் மீயுயர் நீதிமன்றமான உயர் நீதிமன்றமே வெளிப்படையாக அடையாளம் காட்டிவிட்ட வேளையில், அதே வரிசையில் தமது ஜனநாயக விரோதப் போக்குகளை அவரும் அவரது தரப்பினரும் தொடர்ந்து பெருத்த எடுப்பில் முன்னெடுத்து வருகின்றமை விசனத்துக்குரியது.

ஒன்றரைவருடங்களாகஉள்ளூராட்சித் தேர்தலுக்கு ஆயிரம் கோடி ரூபா ஒதுக்கி, மக்களின் வாக்களிக்கும் அடிப்படை உரிமையை உறுதிப்படுத்துவதற்கு வக்கற்ற ரணிலின் அரசு, மறுபுறத்தில் தனக்கு ஆதரவாக மாறும் எதிரணி எம். பிக்களின் பெயரில் பிரேரிக்கப்படும் திட்டங்களுக்கு பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவு திட்டத்தின் கீழ் பல்லாயிரம் கோடி ரூபாவை வாரி வழங்கி ஒதுக்கீடு செய்து வருகின்றது.

அது மாத்திரமல்ல, தன் பக்கம் - தனக்கு ஆதரவாக- மாற விரும்பாத எம். பிக்களின் பெயரில் பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவு திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட நிதி ஒதுக்கீடுகளை கூச்சம் ஏதுமின்றி வெட்டி வருகின்றது அவரது நிர்வாகம்.

அதாவது, இப்படி எம்.பிக்களுக்கு அவரவர்களின் மாவட்டங்களில் அபிவிருத்தி திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்வதை கையூட்டு போல - அரசியல் லஞ்சம் போல - மாற்றிச் செயல்படுத்தும் கீழ்த்தரமான கலாசாரத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சி நிர்வாகம் முன்னெடுத்து வருகின்றது.

இன்னும் ஆறு மாதங்களின் பின்னர் அரச ஊழியர்களுக்கு பெரிய சம்பள உயர்வு வழங்கப்படுவதான அறிவிப்பை இந்த தேர்தல் சமயத்தில் அவரது அரசு வெளியிடுகின்றது. அதை ஒரு திட்டமாக - தேர்தல் விஞ்ஞாபன அறிவிப்பாக - யோசனையாக - வெளியிடுவது வேறு. ஆனால் அதை அரசாங்க முடிவாக - அமைச்சரவைத் தீர்மானமாக - இந்தத் தேர்தல் சமயத்தில் ரணிலின் அரசு வெளியிடுவது அரசியல் நாகரிகம் அற்ற தேர்தல் முறைகேடு வகையறாவை சேர்ந்த ஒரு நடவடிக்கைதான்.

எதிர்க்கட்சிகள் பக்கத்தில் இருந்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பக்கத்துக்குத் தாவி, அமைச்சர் பதவிகளை ஏற்ற ஹரீன் பெர்னாண்டோவினதும் மனுஷ நாணயக்காரவினதும் எம்.பி. பதவிகளை அவர்களின் ஐக்கிய மக்கள் சக்தி கட்சி பறித்தமை சரியானதே என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியதை அடுத்து அவர்களின் அமைச்சர் பதவிகள் பறிபோயின.

அந்த அமைச்சுக்களைத் தமது நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அந்த இருவரையுமே அந்த அமைச்சுக்களுக்கான தமது ஆலோசகர்களாக நியமித்து, அவர்கள் மூலமே தொடர்ந்தும் அந்த அமைச்சை நிர்வகிக்கின்றார். இருவருக்கும் அமைச்சர் தரத்தில் கிடைத்த வசதி, வாய்ப்புகள் இதன் மூலம் தொடர்ந்து கிடைப்பதையும் அவர் உறுதி செய்து இருக்கிறார்.

தேர்தல் சமயத்தில் தன் பக்கம் பாயும் எதிரணியினருக்கு அமைச்சர் மற்றும் ராஜாங்க அமைச்சர் பதவிகளை வாரி வழங்குகின்றார்.

இவையெல்லாம் அவரினதும் அவரது நிர்வாகத்தினதும் ஜனநாயக விரோத போக்குகளைப் பறை சாற்றி நிற்கும் அபத்தமான நடவடிக்கைகளன்றி வேறில்லை.

# அடிப்படைச் சுதந்திரத்துக்கு இலங்கையில் அச்சுறுத்தல்!

## ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழு குற்றச்சாட்டு

வரும்செப்டெம்பர்மாதம்புதியஜனாதிபதியைத் தெரிவு செய்ய இலங்கை தயாராகி வரும் நிலையில், நாட்டில் அடிப்படைச் சுதந்திரம் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளது என்று ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகம் தெரிவித்துள்ளது.

ஆழமான பொருளாதார நெருக்கடியிலிருந்து மீண்டதன் பின்னர் தனது முதலாவது ஜனாதிபதித் தேர்தலை நடத்தவுள்ள இலங்கை, அதன் மனித உரிமைகள் பாதுகாப்பு முறையை சீர்திருத்துவதாக உறுதியளித்த பேதிலும் அதனை இன்னும் செய்யாமல் இருக்கின்றது என்று ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தால் நேற்று வெளியிடப்பட்ட அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

அதற்குப் பதிலாக, 2023 முதல் அறிமுகப்படுத்தப்பட்ட சட்டங்கள் மற்றும் மசோதாக்கள் பாதுகாப்புப் படைகளுக்கு பரந்த அதிகாரங்களை வழங்கியுள்ளதாகவும், கருத்துச் சுதந்திரம் மற்றும் கருத்து வெளிப்படுத்தல் மீதான கட்டுப்பாடுகளை இலங்கை அரச விரிவுபடுத்தியுள்ளதாகவும் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இலங்கை அரசு அதன் அதிகாரத்தைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருத்தலில் ஏற்பட்டுள்ள பின்னடைவு மற்றும் ஊடகவியலாளர்களுக்கு ஏற்படுகின்ற அச்சுறுத்தல் என்பன தொடர்பாகவும் குறித்த அறிக்கை கவனம் செலுத்தியுள்ளது.

குறிப்பாக, இலங்கை நாடானது ஒரு முக்கிய தேர்தலுக்கு ஆயத்தமாகி வருகின்ற நிலையில், இவ்வாறானதொரு நிலை கவலையளிக்கின்றது என்று ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

உள்நாட்டுப் போரின் போதும் அதற்குப் பின்னரும் செய்யப்பட்ட குற்றங்கள் மற்றும் உரிமை மீறல்களுடன் தொடர்புடையவர்கள் தண்டிக்கப்படாமல் இருக்கக் கூடாது என்றும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.




# யாழ்ப்பாணத்தில் வர்த்தகக் கண்காட்சி

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணத்தின் தொழில்துறைகளைப் பிரபல்யப்படுத்தி மேம்படுத்தும் நோக்குடன் "யாழ்ப்பாணம் எக்ஸ்போ 2024" எனும் வர்த்தகக் கண்காட்சி யாழ்ப்பாணத்தில் இன்று ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

யாழ். முற்றவெளி மைதானத்தில் இன்று ஆரம்பமான இந்தக் கண்காட்சி நாளைமறுதினம் வரையில் நடைபெறவுள்ளது. இந்தக் கண்காட்சியை முற்றிலும் இலவசமாகப் பார்வையிட முடியும்.





# ஜனாதிபதித் தேர்தல் முன்னெடுப்புகள் தொடர்பில் மு.கா. தோப்பூர் மத்திய குழுவினர் கலந்துரையாடல்



ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரமதாஸவை வெற்றிபெறச் செய்வதற்கான தேர்தல் முன்னெடுப்புக்ள் தொடர்பில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தோப்பூர் மத்திய குழுவினர் கலந்துரையாடலில் ஈடுபட்டுள்ளனர்.

கட்சியின் தேசிய அமைப்பாளர் எம்.எஸ். தௌபீக் தலைமையில் நேற்று வியாழக்கிழமை இந்த கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது.

இதன்போது முன்னாள் பிரதேச சபை உறுப்பினர்களான றிபாஸ், ஆப்தீன் மற்றும் ஏனைய மத்திய குழு உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.





# கிழக்கு மாகாண மட்டத்திலான தமிழ் மொழி தின விழா நேற்று

(வி.ரி. சகாதேவராஜா)

2024 ஆம் ஆண்டுக்கான கிழக்கு மாகாண மட்ட தமிழ் மொழி தின விழா நேற்று வியாழக்கிழமை கல்முனையில் கோலாகலமாக நடைபெற்றது.

கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் திருமதி சுஜாதா குலேந்திரகுமார் தலைமையில் கல்முனை உவெஸ்லி உயர்தரப் பாடசாலையில் வெகு விமர்சையாக நடைபெற்றது.

ஆரம்பத்தில் தமிழ் பண்பாடு ஊர்வலம் இடம் பெற்றது.

தொடர்ந்து அங்குரார்ப்பண நிகழ்வு இடம்பெற்றது. பின்னர் மாகாண மட்ட போட்டிகள் நடந்தேறின.















# மட்டு. தாதியர் கல்லூரியில் விழிப்புணர்வூட்டும் நிகழ்வு!

(பழுவூரான்)

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையினால் சிறுவர் பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வுப் பாசறை மட்டக்களப்பு தாதியர் பயிற்சிக் கல்லூரியில் நேற்று இடம்பெற்றது.

மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (காணி) திருமதி நவரூபரஞ்சினி முகுந்தன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வு, சிறுவர்களின் பாதுகாப்பு மற்றும் அவர்களது உரிமைகளைப் பாதுகாத்தல் தொடர்பாகப் பொதுமக்களுக்குத் தகவல்களை வழங்குவதற்கான நிகழ்ச்சித் திட்டமாக அமைந்திருந்தது.

இதன்போது சிறுவர்கள் எதிர்நோக்குகின்ற துஷ்பிரயோகங்கள் மற்றும் தாதி அலுவலர்கள் சிறுவர்கள் பாதுகாப்புத் தொடர்பில் கொண்டுள்ள அறிவு, திறமைகள் மற்றும் மனப்பாங்கினை மேம்படுத்துவதற்கான சந்தர்ப்பமாக இப் பாசறை அமைந்திருந்தது.

நாடளாவிய ரீதியில் சிறார்களின் பாதுகாப்பை மேலும் வலுப்படுத்தும் முகமாகவும் துஸ்பிரயோகம் இடம் பெறாவண்ணமும் முற்தடுப்பை மேற்கொள்வதற்குத் தேவையான ஆலோசனை மற்றும் வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வில் மாவட்ட உளநல சமூக உத்தியோகத்தர் ஆர். பிரபாகர், மற்றும் மாவட்ட சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் எம் . ஆர்.நிஷா ஆகியோர் கலந்து கொண்டனர்.











# யாழ். சுண்டிக்குளி மகளிர் கல்லூரி மாணவி சிறந்த டென்னிஸ் வீராங்கனையாக தெரிவு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

வட மாகாண கல்வித் திணைக்களம் ஒழுங்கு செய்திருந்த வட மாகாண பாடசாலைகளுக்கிடையிலான டென்னிஸ் போட்டியில் திறமையை வெளிப்படுத்திய யாழ்ப்பாணம் சுண்டிக்குளி கல்லூரி கல்லூரி மாணவி பிரவினா சுரேஸ் சிறந்த வீராங்கனையாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இந்தப் போட்டி யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

# இலங்கை தேசிய உதைபந்தாட்ட அணியில் இணைந்தார் மன்னார் மாணவன் கிதுஷன்

(எஸ்.ஆர்.லெம்பேட்)

இலங்கை தேசிய உதைபந்தாட்ட அணியில் மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலை மாணவன் இணைத்துக் கொள்ளப் பட்டுள்ளார்.

மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலை மாணவன் செல்வன் கிதுஷன் 17 வயதுக்குட்பட்ட உதைபந்தாட்ட அணியில் இவ்வாறு இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளார்.

பல வீரர்களை தேசிய அணிக்கு மன்னாரிலிருந்து அனுப்பிய புனித சவேரியார் தேசிய பாடசாலை மீண்டும் ஒரு வீரரை 17 வயதுக்குட்பட்ட தேசிய அணிக்கு அனுப்பியுள்ளது. .

மன்னார் புனித. சவேரியார் ஆண்கள் கல்லூரியில் இருந்து பல மாணவர்கள் இலங்கை தேசிய மட்ட உதைப்பந்தாட்ட குழுவினுள் இணைக்கப் பட்டுள்ள நிலையில், இந்த பாடசாலையின் 7 ஆவது மாணவனாக செல்வன் கிதுஷன் இணைக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.





# காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் தம்பலகாமம் பிரதேச செயலகத்தில் சாட்சியம்

**(எச் எம் ஹலால்தீன்)**

காணாமல் போனோர் அலுவலகம் ஊடாக தம்பலகாமம் பிரதேச செயலகத்தில் சாட்சியமளிப்பு நிகழ்வு நேற்று பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெற்றது.

இதில் தம்பலகாமம், கிண்ணியா, கந்தளாய், திருகோணமலை பட்டினமும் சூழலும் ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளை சேர்ந்த

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் கலந்து கொண்டு சாட்சியமளித்தனர்.

கடந்த முறை அழைப்பு விடுக்கப்பட்டும் காணாமல் போனவர்களின் உறவுகள் சாட்சியமளிக்க தவறியவர்கள் நேற்று சாட்சியமளித்தனர்.

இதில் மொத்தமாக 31 உறவினர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்த நிலையில், பலர் சாட்சியம் அளித்தனர்.













# சிறப்புற நடைபெற்ற மடு பிரதேச கலை. பண்பாட்டுப் பெருவிழா

(வாஸ் கூஞ்ஞ,
எஸ்.ஆர்.லெம்பேட்)

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் அலகு மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களம் ஆகியவற்றின் அனுசரணையுடன் மடு பிரதேச செயலகமும் பிரதேச கலை. பண்பாட்டுப் பேரவையும் இணைந்து 2024 ஆம் ஆண்டுக்கான மடு பிரதேச கலை . பண்பாட்டுப் பெருவிழாவை வெகு விமரிசையாக நடாத்தியது.

இந்த விழா நேற்று வியாழக்கிழமை மடு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் மிகவும் சிறப்புற நடைபெற்றது

மடு பிரதேசச் செயலர் கீ பீட் நிஜாகரன் தலைமையில் மடு பிரதேசச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மன்னார் மாவட்ட செயலாளர் க. கனகேஸ்வரன் பிரதம விருந்தினராகவும், வடக்கு மாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி லாகினி நிருபராஷ் சிறப்பு விருந்தினராகவும், மடு வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி வொலன்ரைன் கௌரவ விருந்தினராகவும் கலந்து சிறப்பித்தனர்.

காலை 9.15 மணியளவில் விருந்தினர்கள் குடை, கொடி, ஆலவட்டம், கோலாட்டம், கும்மி நடனம், பூரண கும்பம் தாங்கிய மகளிர் மற்றும் தமிழ் வளர்த்த சான்றோர்களின் வேடப் புனைவாளர்கள் சகிதம் சம்பிரதாய பூர்வமாக அதிதிகள் வரவேற்கப்பட்டனர்

தொடர்ந்து அரங்க நிகழ்வுகள் மடு பிரதேச செயலாளர் தலைமையில் அமரர் செல்லன் மாதவன் அரங்கில் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன.

வரவேற்புரையை உதவி பிரதேச செயலாளர் செல்வி ஜம்யுதா பூவிலிங்கம் நிகழ்த்தினார். மூன்று கலைஞர்கள் நிகழ்வில் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர்

இந்த நிகழ்வில் கலைஞர்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் கலைமன்ற உறுப்பினர்கள், மாணவர் கள் என பலர் கலந்து கொண்டனர்.















# தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி தேர்தல் பிரசாரக் கூட்டம் தர்காநகரில் இடம்பெற்றது

(அஸ்ஹர் இப்றாஹிம்)

தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அனுர குமார திசாநாயக்கவை ஆதரித்து கநேற்று தர்காநகரில் தேர்தல் பிரச்சாரக் கூட்டம் நடைபெற்றது.

'செல்வம் நிறைந்த நாடு – அழகான வாழ்வை' உருவாக்கும் புதிய மறுமலர்ச்சிப் பாதைக்கு நாட்டைத் திருப்புவோம் எனும் தொனிப்பொருளில் இடம்பெற்ற இந்தக் கூட்டத்தில் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திசாநாயக்க உரையாற்றினார்.

அத்துடன், பெரும் திரளான மூவின மக்களும் இதில் கலந்துகொண்டனர்.










# மட்டக்களப்பு உணவகங்களில் இரவுநேர திடீர் அதிரடிச் சோதனை

## 3 உணவகங்களுக்கு சீல் வைப்பு

(வி.ரி. சகாதேவராஜா)

மட்டக்களப்பு சுகாதார பிரிவுக்கு உட்பட்ட ஐந்து பிரிவுகளில் இரவு நேர உணவுப் பாதுகாப்பு சுகாதாரம் தொடர்பாக திடீர் அதிரடிச்சோதனை நேற்று வியாழக்கிழமை இரவு இடம் பெற்றது.

அதன் போது மக்கள் பாவனைக்கு உதவாத உணவுகளை 3 உணவகங்களுக்கு சீல் வைக்கப்பட்டது. 17 உண வகங்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்படவிருக்கிறது.

மட்டக்களப்பு பிராந்திய சுகாதார பணிப்பாளர் வைத்திய கலாநிதி டாக்டர் இராசரெட்ணம் முரளீஸ்வரனின் ஏற்பாட்டில் இவ் இரவு நேர விசேட அதிரடிச் சோதனை இடம்பெற்றது.

இதில் பிரதி சுகாதார பணிப்பாளர் வைத்தியகலாநிதி சரவணபவான் உட்பட எட்டு வைத்தியர்கள், 2 உணவு மருந்து பரிசோதகர்கள், 2 மாவட்ட மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர்கள் 4 மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர்கள், 17 சுகாதார பரிசோதகர்களும் பங்கு பற்றினர்.

கண்காணிப்புக் குழுவின் மூலம் 32 உணவகங்கள் பார்வைக்குட்படுத்தப்பட்டு அவற்றுள் 23 உணவகங்களில் பாவனைக்கு உதவாத உணவுகள் கைப்பற்றப்பட்டன.

அதேவேளை, 17 உணவகங்களுக்கெதிராக வழக்கு





தொடர்வதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

மேலும் உணவகங்களில் உணவுப் பாதுகாப்பு முறைகள் தொடர்பான விழிப்பூட்டல்களும் , ஆலோசனைகளும் வழங்கப்பட்டது. மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடர்ந்து இவ் வாறான செயற்பாடுகள் மூலம் சுகாதாரமான, பாதுகாப்பான உணவுகளை மக்களுக்கு எதிர்காலத்திலும் கிடைக்க செய்வதே சுகாதார பணிமனையின் நோக்கமாகும் என்று பணிப்பாளர் வைத்தியர் இரா. முரளீஸ்வரன் தெரிவித் தார்.


# நீர் கட்டண திருத்தம் தொடர்பான வர்த்தமானி வெளியிடப்பட்டது

நீர் கட்டண திருத்தம் தொடர்பான வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி, இந்த புதிய நீர் கட்டண திருத்தம் ஓகஸ்ட் 21ஆம் திகதி முதல் அமுல்படுத்தப்படும் என நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை தெரிவித் துள்ளது.

இந்த புதிய நீர் கட்டணத் திருத்தத் தின் கீழ், சமூர்த்தி பயனர்கள் மற்றும் தோட்ட குடியிருப்புகள் தவிர்ந்த வீட்டுப் பிரிவு, அரசுப் பாடசாலைகள், அரசு உதவி பெறும் பாடசாலைகள் பிரிவு மற்றும் அரசு அங்கீகரிக்கப்பட்ட தொண்டு நிறுவனங்கள் மற்றும் அரசு மருத்துவமனைகள் பிரிவுகளுக்கு இது பொருந்தும்.

விலை சூத்திரத்தின் அடிப்படையில், வீட்டு நீர் நுகர்வோரின் குடிநீர் கட்ட ணத்தை 7 சதவீதத்தாலும், அரசு மருத் துவமனைகளில் 4.5 சதவீதத்தாலும்,



விகாரைகள் மற்றும் வழிபாட்டுத் தலங் களுக்கு 6.3 சதவீதத்தாலும் குறைக்க தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகால மைப்புச் சபை ஒப்புதல் அளித் துள்ளது.

இதன்படி, மொத்த நீர் கட்டணத்தை 5.94 சதவீதத்தால் குறைக்க அமைச் சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

வீட்டு பிரிவில் 0 முதல் 05 அலகு களுக்கான கட்டணம் 60 ரூபாவில் இருந்து 50 ரூபாவாக ஆக 10 ரூபா வால் குறைக்கப்பட்டுள்ளது.

76 முதல் 100 அலகுகளுக்கு இடைப்பட்ட அலகுக்கு அறவிடப்படும் கட்டணம் 270 ரூபாயில் இருந்து 250 ரூபாவாக 20 ரூபாவால் குறைக்கப் பட்டுள்ளது.

அரசு மற்றும் அரசு உதவி பெறும் பாடசாலைகள் மற்றும் அரசு அங்கீக ரிக்கப்பட்ட தொண்டு நிறுவனங்கள் மற்றும் அரசு மருத்துவமனைகள் பிரி வின் கீழ் உள்ள அனைத்து பிரிவுகளுக் கும் 60 ரூபாவாக இருந்த கட்டணம் 5 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ள நிலையில் அதன் புதிய கட்டணம் 55 ரூபாவாகும்.

இதேவேளை, அரச வைத்தியசா லைகளுக்கு 100 ரூபாவாக இருந்த ஒரு அலகு நீர் 05 ரூபாவினால் குறைக் கப்பட்டுள்ள நிலையில், அதன் புதிய கட்டணம் 95 ரூபாவாகும். எனினும், இந்த குடிநீர் கட்டண திருத்தத்தின் கீழ் மாதாந்திர சேவைக் கட்டணத்தில் எந்த திருத்தமும் செய்யப்படவில்லை.

# தந்தை வாகன விபத்தில் நேற்றுப் பலி கைதி மகன் நஞ்சருந்தி இன்று சாவு

# சந்தேகம்!

## வெளியிட்டுள்ளார் அண்ணாமலை



யாரையோ காப்பாற்றும் முயற்சியாக, தந்தை, மகன் இருவரின் மரணங்களும் நிகழ்ந்துள்ளனவா என்ற சந்தேகம் எழுகிறது என தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

அண்ணாமலை தனது சமூகவலைத் தளப் பதிவிலேயே இதனைத் தெரிவித்துள்ளார். அதில்,

“கிருஷ்ணகிரி மாவட்டம் பர்கூர் அருகே, தனியார் பள்ளியில் போலி என்.சி.சி. முகாம் நடத்தி, பள்ளி மாணவியைப் பாலியல் வன்கொடுமை செய்த வழக்கில் கைதான, நாம் தமிழர் கட்சியின் நிர்வாகி சிவராமன், காவல்துறை சிறப்புப் புலனாய்வுக் குழு விசாரணைக்கு முன்பாகவே, எலி மருந்து சாப்பிட்டு இன்று காலை உயிரிழந்துள்ளார் எனக் கூறுகின்றனர். மேலும், அவரது தந்தை அசோக்குமார் என்பவரும், நேற்று இரவு வீதி விபத்தில் மரணமடைந்துள்ளார் எனத் தெரியவருகின்றது.

இந்த இரண்டு மரணங்களுமே, சந்தேகத்திற்கிடமானவையாக உள்ளன. சிறப்புப் புலனாய்வுக் குழு விசாரணையில், சிவராமன் இந்த பாலியல் குற்றத்தில் தொடர்புடைய வேறு யாரேனும் முக்கியப் புள்ளிகளின் பெயர்களை வெளியில் கூறிவிடுவாரோ என்ற அச்சத்தில், சிவராமன் கொல்லப்பட்டிருக்கலாமோ என்ற கேள்வி எழுகிறது. உண்மையில் இந்த வழக்கில் தொடர்புடைய அனைவரும் கைது செய்யப்பட்டுள்ளனரா அல்லது யாரையோ காப்பாற்றும் முயற்சியாக, தந்தை, மகன் இருவரின் மரணங்களும் நிகழ்ந்துள்ளனவா என்ற பலத்த சந்தேகம் எழுகிறது.

பள்ளி மாணவிகளுக்கு எதிரான பாலியல் வன்முறை தொடர்பாக அமைக்கப்பட்டுள்ள சிறப்புப் புலனாய்வுக் குழு, இது தொடர்பாக முழுமையான விசாரணை நடத்தி, இந்தக் கேள்விகளுக்கான உண்மையான பதில்களை வெளிக்கொண்டு வர வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்.”

– இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.





# ஸ்பெய்னை அவமதித்தார் விஜய்; காவல் ஆணையர் அலுவலகத்தில்

# முறைப்பாடு!



தமிழக வெற்றிக் கழகக் கொடி தொடர்பாக விஜய் மீது முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நடிகர் விஜய் கடந்த பெப்ரவரி மாதம் தமிழக வெற்றிக் கழகம் என்ற புதிய கட்சி தொடங்கிய நிலையில், 2026ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் போட்டியிடவுள்ளார் எனவும் அறிவித்தார். இந்நிலையில் நேற்று தமிழக வெற்றிக் கழகத் தலைவர் விஜய், தமது கட்சிக் கொடியை அறிமுகப் படுத்தினார்.

அந்தக் கட்சிக் கொடியில் சிவப்பு மற்றும் மஞ்சள் நிறங்கள் இடம் பெற்றுள்ளன. மேலும் இரண்டு யானைகளும் வெற்றியைக் குறிக்கும் வகையில் வாகைப்பூவும் இடம்பெற்றிருந்தன. மேலும் தமிழக வெற்றிக் கழகப் பாடலையும் விஜய் அறிமுகப்படுத்தினார்.

இந்நிலையில், தமிழக வெற்றிக் கழகக் கொடி தொடர்பாக விஜய் மீது முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பான மனுவில், ஸ்பெய்ன் நாட்டை அவமதிக்கும் வகையிலும், இந்திய தேர்தல் விதிமுறைகளுக்குப் புறம்பாகவும் த.வெ.க. கொடி வடிவமைக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. சமூக ஆர்வலர் ஒருவர் இந்த மனுவை சென்னை காவல் ஆணையர் அலுவலகத்தில் வழங்கியுள்ளார்.

முன்னதாக, இந்தக் கட்சிக் கொடியில் யானைச் சின்னம் இடம் பெற்றுள்ளதால் அதனை நீக்க வேண்டும் என இந்தியத் தேர்தல் ஆணையத்திடம், தமிழ்நாடு பகுஜன் சமாஜ் கட்சி முறைப்பாட்டு மனுக் கொடுக்கவுள்ளது எனத் தகவல்கள் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.



## இந்திய மக்கள் தொகை கணக்கெடுப்பின்போது

# சாதி பதிய ஏற்பாடு

## கூட்டணிக் கட்சிகள் வலியுறுத்தல்

## ஆலோசிக்க மத்திய அரசு முடிவு

மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்போது சாதியையும் கணக்கில் எடுத்துக்கொள்ள மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. இது தொடர்பாக பரிசீலனை செய்யப்படவுள்ளது எனத் தகவல் வெளியாகியுள்ளது.

பீகார் மாநிலத்தில் நிதிஷ் குமார் தலைமையிலான அரசு மாநில அளவில் சாதிவாரிக் கணக்கெடுப்பை நடத்தியது. அதனைத் தொடர்ந்து பல்வேறு கட்சித் தலைவர்கள் நாடு தழுவிய சாதிவாரி கணக்கெடுப்பை நடத்த வேண்டும் என கோரிக்கை வைத்து வருகின்றன.

இந்தியாக் கூட்டணியின் முக்கிய கட்சியான காங்கிரஸ் தனது தேர்தல் அறிக்கையிலேயே சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தப்படும் எனத் தெரிவித்திருந்தது.

ஆனால், பா.ஜ.க.வுக்கு சாதிவாரி கணக்கெடுப்பு நடத்துவதில் ஈடுபாடு இருக்கவில்லை. தற்போது பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இருக்கும் நிதிஷ்குமார், சிராக் பஸ்வான் உள்ளிட்ட முக்கிய தலைவர்களும் சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என தெரிவித்து வருகின்றனர்.

இந்நிலையில், இனிவரும் மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்போது சாதியையும் கணக்கில் எடுத்துக் கொள்ள மத்திய அரசு திட்டமிட்டுள்ளது எனவும், இது தொடர்பாக பரிசீலனை செய்யப்படவுள்ளது எனம் தகவல் வெளியாகியுள்ளது.

இது தொடர்பாக ஆலோசனை நடத்தப்பட்டு வருகிறது. ஆனால், இறுதி முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை என அறியமுடிகின்றது.

கடைசியாக 2011ஆம் ஆண்டு இந்தியளவில் மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. அதன் பின் கொரோனா வைரஸ் தொற்று காரணமாக மக்கள் தொகை கணக்கெடுப்பு ஒத்திவைக்கப்பட்டது. அடுத்த மக்கள் தொகை கணக்கெடுப்பு எப்போது நடத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.



# அமெரிக்காவில் 90 அடி உயர அனுமன் சிலை



அமெரிக்காவின் டெக்ஸாஸ் மாகாணத்தில் 90 அடி உயரமுடைய வெண்கல அனுமன் சிலை திறக்கப்பட்டுள்ளது. “ஒன்றிணைப்பு சிலை“ எனப் பெயரிடப்பட்டுள்ள இந்தச் சிலை அமெரிக்காவில் மூன்றாவது உயரமான சிலையாக அமைந்துள்ளது.

நியூயோர்க்கில் உள்ள சுதந்திர தேவி சிலை (151 அடி), புளோரிடாவின் ஹாலண்டேல் கடற்கரையில் உள்ள பெகாசஸ் மற்றும் டிராகன் சிலை (110 அடி) ஆகியவை அமெரிக்காவின் முதல் இரு உயரமான சிலைகள் ஆகும்.

டெக்ஸாஸ் மாகாணத்தின் ஹூஸ்டனிலிருந்து சுமார் 35 கி.மீ. தூரத்தில் சுகார் லேண்ட் பகுதியில் அமைந்துள்ள ஸ்ரீ அஷ்டலக்ஷ்மி கோவில் வளாகத்தில் இந்தப் பிரம்மாண்ட அனுமன் சிலை நிறுவப்பட்டுள்ளது.

கடந்த 15ஆம் திகதி முதல் 18ஆம் திகவரை நடைபெற்ற “பிராண பிரதிஷ்டை” நிகழ்வில் ஹெலிகாப்டர் மூலம் சிலைக்கு மலர் தூவி, புனித நீர் தெளித்து, 72 அடி நீள மாலை அணிவித்து சிறப்பிக்கப்பட்டது. ஆயிரக்கணக்கான பக்தர்கள் ஸ்ரீராமர் மற்றும் அனுமன் நாமங்களை பக்தியோடு கோஷங்களாக எழுப்பினர்.

# பொறுப்பற்றவர்

## டிரம்பை சாடுகிறார் கமலா ஹாரிஸ்

## அவரை வெள்ளை மாளிகையில் அமர்த்தினால் விளைவுகள் தீவிரமாக இருக்கும் எனவும் தெரிவிப்பு





"டிரம்பை மீண்டும் வெள்ளை மாளிகையில் அமர்த்தினால் ஏற்படும் விளைவுகள் தீவிரமானதாக இருக்கும். அவர் பொறுப்பற்ற மனிதர்" என கமலா ஹாரிஸ் சாடியுள்ளார்.

அமெரிக்காவில் எதிர்வரும் நவம்பர் 5ஆம் திகதி அதிபர் தேர்தல் நடைபெறவுள்ளது. இந்தத் தேர்தலில் குடியரசுக் கட்சி சார்பாக முன்னாள் அதிபர் டொனால்ட் டிரம்பும், ஜனநாயகக் கட்சி சார்பாக தற்போதைய துணை அதிபரும் இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவருமான கமலா ஹாரிஸ் ஆகியோர் போட்டியிடுகிறார்கள்.

இதனால், அனல் பறக்கும் பிரசாரத்தில் இருவரும் ஈடுபட்டுள்ளனர். ஜனநாயகக் கட்சியின் தேசிய மாநாடு கடந்த 20ஆம் திகதி தொடங்கியது. இந்த மாநாட்டில் அமெரிக்க முன்னாள் அதிபர்கள் பராக் ஒபாமா, பில் கிளிண்டன் உள்ளிட்டோரும் பங்கேற்றனர்.

சிக்காக்கோ நகரத்தில் நடைபெற்ற இந்த தேசிய மாநாட்டின் இறுதி நாளான இன்று கமலா ஹாரிஸ் உரையாற்றினார்.

அப்போது அவர்,

"அமெரிக்காவுக்கு ஒரு புதிய பாதையை வகுக்கும் வாய்ப்பு உருவாகியுள்ளது. அமெரிக்காவின் அதிபர் வேட்பாளராக, ஜனநாயகக் கட்சி சார்பில் போட்டியிடும் வாய்ப்பை ஏற்றுக்கொள்கிறேன். இந்தத் தேர்தலின் மூலம் நாம் முன்னோக்கிச் செல்லும் காலம் உருவாகும்.

அனைத்து அமெரிக்கர்களுக்கும் ஒரு சிறந்த அதிபராக நான் இருப்பேன் என்று உறுதியளிக்கிறேன். நீங்கள் என்னை எப்போதும் நம்பலாம்.

அமெரிக்க முன்னாள் அதிபர் டொனால்ட் டிரம்ப் ஒரு பொறுப்பற்ற மனிதர். அவரை மீண்டும் வெள்ளை மாளிகையில் அமர்த்தினால் ஏற்படும் விளைவுகள் தீவிரமானதாக இருக்கும். வாழ்நாள் முழுவதும் மக்கள்தான் எனக்கு எஜமானர்கள்" – இவ்வாறு அவர் கூறினார்.

# கனடா முரசு

பக்கங்கள் 08

வெள்ளிக்கிழமை 23/08/2024


## கனடாவைத் தவிர்க்கும் சர்வதேச மாணவர்கள்!

சர்வதேச மாணவர்கள், கனடாவைப் புறக்கணிக்கத் தொடங்கியுள்ளார்கள் எனத் தெரிவிக்கப் படுகின்றது.

கனடாவுக்கு கல்வி கற்கச் செல்லும் சர்வதேச மாண 02

கனடா தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

Canada Tamil National Alliance

Registered: OC # 1926238

# நாளையும் மறுதினமும் நடக்கும் தமிழர் தெரு விழா; ஆதரவு தருக!

### கனடா தமிழர் தேசிய கூட்டமைப்பு வேண்டுகோள்

கனடிய தமிழர் பேரவை நடாத்தும் பத்தாவது ஆண்டு தமிழர் தெரு விழாக்கு ஆதரவு அளிக்குமாறு உறவுகளை அன்புடன் அழைக்கின்றோம் என்று கனடா தமிழர் தேசிய கூட்டமைப்பு அறிக்கை ஒன்றின் மூலம் கேட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:- 02



# ரயில்வே ஊழியர்கள் வேலை நிறுத்தம் மத்திய அரசாங்கம் கையாளும் விடயம்

### ஒன்ராரியோ மாகாண முதல்வர் டக் ஃபோர்ட் தெரிவிப்பு

ஒன்ராரியோ, ஓகஸ்ட் 23

நாடளாவிய ரீதியில் ஆரம்பமாகியுள்ள ரயில்வே ஊழியர்கள் வேலை நிறுத்தம் மத்திய அரசாங்கம் சம்பந்தப்பட்ட விடயம் என ஒன்ராரியோ மாகாண முதல்வர் டக் ஃபோர்ட் தெரிவித்துள்ளார்.

அத்துடன்,இந்தவேலைநிறுத்தத்தை முடிவுக்கு கொண்டு வருவதற்கு இரு தரப்பும் மீண்டும் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டும் என ஃபோர்ட் கோரியுள்ளார்.

கனடாவின் இரண்டு நாடளாவிய ரீதியில் மிகப்பெரிய ரயில்வே ஊழியர்கள் சங்கங்கள் நேற்று ஆரம்பித்த வேலை நிறுத்தம் பயணிகள் ரயில் சேவையில் பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ளது. 02

## நாளையும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கனடிய தமிழர் பேரவை ஆண்டு தோறும் நடத்தி வரும் தமிழர் தெரு விழா எதிர்வரும் ஓகஸ்ட் 24, 25 இல் சீரோடும் சிறப்போடும் நடைபெற இருக்கிறது. இது பத்தாவது தமிழர் தெரு விழா ஆகும். சென்ற ஆண்டு நடந்த தமிழர் தெரு விழாவில் சுமார் 3 இலட்சம் மக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

தமிழர் தெரு விழா வெறும் பொழுது போக்கு நிகழ்ச்சியல்ல. அது கனடிய தமிழர்களின் கலை, பண்பாடு விழுமியங்களின் குறியீடு. கனடிய தமிழ் வணிகர்கள் தங்கள் பொருள்களை, சேவைகளை சந்தைப் படுத்துவதற்குப் பொருத்தமான களமாகும்.

இந்த விழாவின் மூலம் கனடிய தமிழர் பேரகவ கடந்த 20 ஆண்டுகளாக தாயகத்தில் வாழும் எமது சொந்தங்களின் வாழ்வாதாரத்தை நிமிர்த்தவும் வேலை வாய்ப்புக்களை உருவாக்கவும் பாடுபட்டு வருகிறது. குறிப்பாக 18 மே, 2009 இல் போர் முடிவுக்கு வந்த பின்னர், போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவப் பல முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

2024 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 22 ஆம் திகதி, கனடா - மட்டக்களப்பு நட்புறவுப் பண்ணையான கெய்ல் டி ராஜா திட்டத்தின் கீழ் மட்டக்களப்பு திரைமடுவில் பொருளாதார நிலைத் தன்மை மற்றும் வேலை வாய்ப்புக்களை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது.

வடக்கு மற்றும் கிழக்கு பொருளாதார மேம்பாட்டு (Need) மையத்தின் ஊடாக கனடிய தமிழர் பேரவை மேற்கொள்ளும் இந்த முயற்சியானது விவசாய பயிர் செய்கைகளை மேபம்படுத்துவதோடு, உள்ளூர் சமூகப் பொருளாதார சுதந்திரத்திற்கான ஒரு படியாகவும் அமைந்துள்ளது. ஐந்து ஏக்கர் நிலத்தில் பயிரிடப்பட்ட ஆயிரம் முருகை மரத்தின் இலைகள் இப்போது சந்தைப்படுத்தப்பட்டு வருகின்றன.

இதேபோல் திருகோணமலை மாவட்டத்தில் உள்ள தென்னவன் மரவடி என்ற ஊரில் 10 ஏக்கர் (மொத்தம் 20 ஏக்கர்) குத்தகை நிலத்தில் பால் பண்ணை உருவாக்கப்பட்டுள்ளது. அங்கு 200 ஆடுகள் வளர்க்கப்படுகின்றன. பண்ணைப் பொறுப்பாக ஒரு முன்னாள் போராளி நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்தத் திட்டத்தின் கீழ் தென்னன் மரவடியில் முன்பு வாழ்ந்து பின் அங்கிருந்து துரத்தப்பட்ட 230 உறுப்பினரைக் கொண்ட 82 குடும்பங்கள் மீள் குடியேறி உள்ளனர். 279 குடும்பங்கள் இன்னும் வரவேண்டி உள்ளன. இவர்களில் 817 உறுப்பினர்களைத் கொண்ட 260 குடும்பங்கள் முல்லைத்தீவு மாவட்டத்திலும் 40 உறுப்பினரைக் கொண்ட 19 குடும்பங்கள் வடமாகாணத்தில் பல்வேறு பகுதிகளில் இடம்பெயர் வாழ்க்கை வாழ்ந்து வருகின்றனர். இருந்தும் பள்ளிக்கூடம், போக்குவரத்து, மருத்துவ வசதிகள் இல்லாத மீள்குடியேற்றம் தடைகளைச் சந்திக்கின்றது.

போரால் பாதிக்கப்பட்ட இலங்கையில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தில் மாற்றத்தை ஏற்படுத்தவும் பொருளாதாரத்தைத் திட்டப்படுத்தவும் கனடிய தமிழர் பேரவை வடக்குக் கிழக்கு பொருளாதார அபிவிருத்தி மையம் ஊடாக கைத்தறி புடைவை தொழிலை வலுவூட்டல் மற்றும் பண்பாட்டு பாது காப்பு ஆகியவற்றில் குறியீடாக Made in Mullaitivu (முல்லைத்தீவில் தயாரிக்கப்பட்டது) என்ற திட்டம் நடைபெற்று வருகிறது.

2020 இல் தொடங்கிய இந்தத் திட்டத்தின் கீழ் பெண் கலைஞர்களின் நேர்த்தியான கைவினைத் திறனை வெளிப் படுத்தவும் நிலையான பணியில் முன்னேற்றம் மற்றும் பெண்களுக்கு அதிகாரமளித்தல் ஆகியவற்றின் அர்ப்பணிப்புடன் செயற்படவும் திட்டம் பயன்பட்டு வருகிறது.

கனடியத் தமிழர் பேரவை நடத்தும் தைப்பொங்கல் விழா தமிழர் தெரு விழா போன்ற விழாக்களில் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் நெசவு செய்ப்படும் கைதறிச் சேலைகள் விற்பனை செய்ப்படுகின்றன.

கடந்த ஆண்டு வடக்கிலும் கிழக்கிலும் நிலவிய மருந்துத் தட்டுப் பாட்டை போக்க தெல்லிப்பழை ஆதார மருத்துவமனை மற்றும் மட்டக்களப்பு போதனா மருத்துவமனை இரண்டும் 2லட்சம் டொலர் பெறுமதியான மருந்துப் பொருள்களை கனடியத் தமிழ் பேரவை அன்பளிப்புச் செய்திருந்தது.

மலைநாட்டில் இயங்கும் தெகியவிற்ற தமிழ் மகா வித்தியாலயத்திற்கு ஓர் அறிவியல் கூடம் 90 ஆயிரம் கனடிய டொலர் செலவில் கட்டிக் கொடுத்துள்ளது.

கடந்த 10 ஆண்டுகளாக வெற்றிகரமாக நடத்தப்பட்டு வரும் தமிழர் தெரு விழாவுக்கு எதிராக இரண்டு பக்க அறிக்கை ஒன்றை கனடிய தமிழர் தேசிய அவை வெளியிட்டுள்ளது. அதில் அரைத்த மாவை மீண்டும் அரைத்துள்ளது. இமாலயப் பிரகடனத்தில் தமிழர் என்ற சொல் இல்லையாம். இது மொட்டையில் மயிர் பிடுங்குவது போன்றது.

இமாலயப் பிரகடனம் சில முற்போக்கு பௌத்த தேரர்களுக்கு உருவாக்கிய சிறந்த இலங்கைக்கான sanga fora better srilanka வெளியிட்டது. இந்த இமாலயப் பிரகடனம் இனச் சிக்கலுக்கான அரசியல் தீர்வை முன்வைக்க வில்லை.

அது அரசியல் கட்சிகளுக்கும் அரசியல் வாதிகளுக்கும் செய்ய வேண்டிய காரியம். அது எதைச் சாதிக்க முயல்கிறது என்ற கடந்த காலங்களில் தீர்வு முயற்சிகளுக்கு தடையாக இருந்த பௌத்த சிங்களவர்களது - குறிப்பாக பௌத்த தேரர்களது - மனங்களை வெல்லப் பார்க்கிறது. இந்தப் பிரகடனத்துக்கு நான்கு முக்கிய பௌத்த மதத் பீடங்கள் தங்களது ஆதரவையும் நல்லாட்சிகளையும் வழங்கி இருப்பது வரலாற்றின் முக்கிய திருப்பமாகும். எது,எப்படி இருப்பினும் இந்த முயற்சியில் ஈடுபட்டவர்கள் அதனை உறை நிலைக்குள் தள்ளிவிட்டதாகத் தெரியாது.

இருந்தும் கனடியத் தமிழர் தேசிய அவை தனது குறுகிய அரசியல் தேவைக்காக தழிழர் தெருவிழாவை புறக்கணிக்குமாறு கேட்கிறது. இந்த அமைப்புத்தான் கடந்த 2021.11.21 அன்று த.தே.கூ. இன் ஆதரவில் நடந்த பொதுக் கூட்டத்தை குழப்பியது. ஜனநாயக விழுமியங்களில் ஒன்றான பேச்சுச் சுதந்திரத்தை கனடா மண்ணில் நின்று கொண்டு காலில் போட்டு மிதித்தது.

எனவே பொது மக்கள் போலித் தேசிய வாதிகள் எதிர்ப்பைப் பொருட் படுத்தாது வழக்கம் போல் திரளாக வந்து தமிழர் தெரு விழாவுக்கு ஆதரவு நல்லக வேண்டும் என அன்புடன் கேட்டுக்கொள்கிறோம். - என்று உள்ளது.

## ரயில்வே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரயில் சேவையில் பணிநிறுத்தம் வியாழக்கிழமை விடிகாலை ஆரம்பமானது.

கனேடியன் நெஷனல் ரெயில்வே கூட்டுத்தாபனம், கனேடியன் பசுபிக் கன்சாஸ் சிட்டி லிமிடட் பணியாளர் அமைப்பு ஆகியன இந்த வேலைநிறுத் தத்தை முன்னெடுக்கின்றன.

புதிய ஒப்பந்தம் குறித்த பேச்சுவார்த் தையில் இணக்கம் காணப்படாத நிலையில் இந்த பணிநிறுத்தம் ஆரம்பமானது.

கனடாவின் இரண்டு மிகப்பெரிய ரயில் சேவை நிறுவனங்களினால் ஒரே நேரத்தில் பணிநிறுத்தம் முன்னெடுக் கப்படுவது இதுவே முதல் முறையாகும்.

கனேடியன் பசுபிக் கன்சாஸ் சிட்டி லிமிடட்டுக்கு சொந்தமான வழித்தடங் களில் இயங்கும் றொரன்டோ, மொன் ரியல், வான்கூவர் நகரங்களில் உள்ள பயணிகள் சேவையில் இந்த வேலை நிறுத்தம் பாதிப்புகளை ஏற்படுத்துகி றது.

## கனடாவைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வர்களில் அதிகமானோர் இந்தியாவிலிருந்து செல்பவர்கள் என்பது பலரும் அறிந்த விடயம்தான்.

அதிலும், இந்தியாவின் பஞ்சாப் மாநிலத்திலிருந்துதான் அதிக மாணவர்கள் கனடாவுக்கு கல்வி கற்கச் செல்கிறார்கள்.

இன்னொரு விடயம், கல்வி கற்கச் செல்வோரின் நோக்கம், கல்வி கற்பது மட்டும் அல்ல, கல்வி கற்கச் சென்றதும், தன் வாழ்க்கைத் துணையையும் கனடாவுக்கு வரவழைப்பதும், பின், கனடாவிலேயே குடியமர்வதும்தான் பெரும்பாலான சர்வதேச மாணவர்களின் திட்டம் என்பதை யாரும் மறுக்க முடியாது.

ஆனால், சர்வதேச மாணவர்கள் அதிகம் விரும்பும் கனடா, சமீப காலமாக மாணவர்களுக்கு கட்டுப்பாடுகளை அதிகரித்துக்கொண்டே இருக்கிறது.

ஆகவே, சர்வதேச மாணவர்கள், கனடாவைப் புறக்கணிக்கத் தொடங்கியுள்ளார்கள்.

இந்தியாவின் பஞ்சாப் மாநிலத் திலிருந்து கனடாவுக்கு கல்வி கற்க விண்ணப்பிப்போர் எண்ணிக்கை மட்டுமே, 70 முதல் 80 சதவிகிதம் வரை குறைந்துவிட்டதாக, கனடாவுக்கு மாணவர்களை அனுப்ப உதவும் முகவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

அத்துடன், சர்வதேச மாணவர்கள் மட்டுமல்ல, வழக்கமாக கனடாவுக்கு புலம்பெயர்வது குறித்து ஆலோசனை கேட்பவர்கள் எண்ணிக்கை கூட கணிசமாக குறைந்துவிட்டதாகவும் இந்த முகவர்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.




# மார்க்கம் பெண்ணினுடைய மனித எச்சங்களே பாரி சவுண்ட் பகுதியில் எரிந்த நிலையில் மீட்பு

ஒன்ராரியோ, ஓகஸ்ட் 23

ஒரு வாரத்திற்கு முன்னர் பாரி சவுண்ட் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட மனித எச்சங்கள் காணாமல் போன மார்க்கம் பெண்ணினுடையவை என்று யோர்க் பிராந்திய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

யுக்-யிங் அனிதா முய்யை அவரது குடும்பத்தினர் ஆகஸ்ட் 9-ஆம் திகதி காணவில்லை என்று முதன்முதலில் முறைப்பாடு செய்திருந்தனர்.

மூன்று நாள்களுக்குப் பிறகு ஓகஸ்ட் 12-ஆம் திகதி, எரிக்கப்பட்ட மனித எச்சங்களை அவ்ரோ அரோ ரோட்டில் உள்ள ஒரு காணியில் இருந்து பொலிஸார் கண்டறிந்தனர்.

பின்னர் அவை முய்யின் எச்சங்கள் என உறுதி செய்யப்பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

ரொரன்டோவைச் சேர்ந்த இருவர் மற்றும் விட்பியைச் சேர்ந்த மூன்று இளம் சந்தேக நபர்கள், மார்க்கம்ரியல் எஸ்டேட் முகவருக்குச் சொந்த மான உடைமையை வைத்திருப்பது கண்ட றியப்பட்ட பின்னர், முய்யின் காணா மல் போனமை தொடர்பில் அவர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.



# றொரன்டோ மிருகக்காட்சிச் சாலையில் சிவப்பு நிற பெண் பன்டா ஒன்று மரணம்

ஒன்ராரியோ, ஓகஸ்ட் 23

றொரன்டோ மிருகக்காட்சிச் சாலையில் இருந்த பத்து வயதான சிவப்பு நிற பெண் பன்டா ஒன்று உயிரிழந்துள்ளது.

கடந்த ஜூன் மாதத்தில் இந்த பன்டா இரண்டு குட்டிகளை ஈன்றமை குறிப்பிடத்தக்கது.

சகுனா என்றழைக்கப்படும் இந்த பன்டா இந்த வாரம் உயிரிழந்ததாக டொரன்டோ மிருகக்காட்சிசாலை சமூக தளத்தில் பதிவு செய்யப்பட் டுள்ளது.

கடந்த சில மாதங்களாக சுகவீன முற்றிருந்த இந்த பன்டா, மாரடைப் பால் உயிரிழந்ததாக அந்த பதிவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சகுனாவின் குட்டிகளில் ஒன்று மூன்று வாரங்களுக்கு முன்னர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக் கது.

குறித்த சிவப்பு பன்டாவானது இவ்வருட ஆரம்பத்தில் வான்கூவர் மிருகக்காட்சிசாலையில் இருந்து ஓய்வு பெறுவதற்காக டொரன்டோ மிருகக்காட்சி சாலைக்கு இடமாற்றப் பட்டது.




# எயார் கனடாவின் விமானிகள் வேலைநிறுத்த முன்னறிவிப்பு!

ஒன்ராரியோ, ஓகஸ்ட் 23

எயார் கனடா விமானிகள் அடுத்த மாதம் வேலை நிறுத்தத்தில் ஈடுபட வுள்ளனர். செப்ரம்பர் 17ஆம் திகதி வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவதற் கான தீர்மா னத்திற்கு எயார் கனடா வின் விமானி களில் பெரும்பான்மை யானோர் விருப்பத்தை வெளியிட் டுள்ளனர்எனத்தெரிவிக்கப்படுகின்றது.

சுமார் 5,400 விமானிகளைக் கொண்ட விமானிகள் அமைப்பில் 98 சதவீதமானோர் இந்தத் தீர்மானத் திற்கு ஆதரவளித்துள்ளனர்.

விமானிகளுக்கான ஒப்பந்தம் தொடர்பில் 2023ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதல் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்று வருகின்றமை குறிப் பிடத்தக்கது.

இந்த நிலையில், செப்ரம்பர் 17ஆம் திகதி வரையான 21 நாள்கள் காலக் கெடுவினை எயார் கனடா நிர்வா கத்திற்கு வழங்கியுள்ளதாக விமா னிகள் தொழிற்சங்கத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

# 70 மில்லியன் டொலர்கள் பரிசை தட்டிச் செல்லும் லொத்தர் சீட்டு!

## வடகிழக்கு ஒன்றாரியோவில் விற்பனையானதாம்

கனடாவின் வடகிழக்கு ஒன்றாரி யோவில் விற்பனை செய்யப்பட்ட லொத்தர் சீட்டு ஒன்றுக்கு 70 மில்லி யன் டொலர் பணப்பரிசு கிடைக்க பெற்றுள்ளது.

வடகிழக்கு ஒன்றோரியோவின் திம்ஸ்கமிங் பகுதியில் இந்த லொத்தர் சீட்டு விற்பனை செய்யப்பட் டுள்ளது.

கடந்த ஏப்ரல் மாதம் தொடக்கம் இதுவரையில் ஒன்றாரியோ மாகா ணத்தில் ஐந்து தடவைகள் லொட்டோ ஜாக்பொட் பணப்பரிசு வென்றெடுக்கப் பட்டுள்ளன.

இதன்படி கடந்த நான்கு மாதங்க ளில் மட்டும் லொட்டோ ஜாக்பாட் லொத்தர் சீட்டில் 265 மில்லியன் டொலர் பணப்பரிசு வென்றெடுக்கப்பட் டுள்ளது. அத்துடன் இம்முறை 70 மில்லியன் டொலர் பணப்பரிசும் வென்றெடுக்கப்பட்டுள்ளமை குறிப் பிடத்தக்கது.

# தமிழர் இளைஞர் சுட்டுக் கொலை: பதின்ம வயதினர் இருவர் கைது!

ஒன்ராரியோ, ஓகஸ்ட் 23

தமிழர் இளைஞர் ஒருவரின் மர ணம் தொடர்பில் றொரன்டோ பொலி ஸார் இரண்டு பதின்ம வயது சிறுவர் கள் மீது முதல் நிலை கொலைக் குற்றச்சாட்டை சுமத்தியுள்ளனர்.

இழுவை ட்ரக் தொழில் தொடர் பான சர்ச்சையால் எழுந்த கொலை இது எனக் கருதப்படுகின்றது.

ஜூலை மாதம் 6ஆம் திகதி ஸ்கார் பரோ வோர்டன் மற்றும் எல்ஸ்மியர் சந்திப்புக்கு அருகில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த இளைஞர் உயிரிழந்தார்.

இதன் பின்னர் உயிரிழந்தவர் 28



வயதான சுலக்சன் செல்வசிங்கம் என அடையாளம் காணப்பட்டார்.

இந்தச் சம்பவம் குறித்து இரண்டு பதின்ம வயதினர் மீது றொரன்டோ பொலிஸார் முதல் நிலை கொலைக் குற்றச்சாட்டுகளைப் பதிவு செய்துள் ளனர்.

இழுவை ட்ரக் தொழில் தொடர் பான 11 துப்பாக்கிச் சூடு குற்றங்களு டன் அவர்களை தொடர்புபடுத்தும் விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

அவற்றில் எட்டு குற்றங்கள் கனடா தின நீண்ட வார இறுதியில் நிகழ்ந் துள்ளவை. ஒஷாவா, ஸ்டோவில் நகரங்க ளைச் சேர்ந்த 15,16 வயதுடைய இரண்டு இளைஞர்களை ஜூலை 15 அன்று கைது செய்துள்ளனர் என்று ஓகஸ்ட் 21ஆம் திகதி இடம்பெற்ற ஊடகவிலயாளர் சந்திப்பில் பொலி ஸார் தெரிவித்துள்ளனர்.



# உலகின் 2ஆவது பெரிய வைரத்தை கண்டுபிடித்த கனேடிய நிறுவனம்!

உலகின் இரண்டாவது பெரிய வைரம் பொட்ஸ்வானாவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

கனடாவைச் சேர்ந்த லுகாரா டயமண்ட் கார்ப் (Lucara Diamond Corp) நிறுவனத்தின் கெய்ரோ சுரங்கத்தில் 2,492 காரட் வைரம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கடந்த1905ஆம் ஆண்டில் தென்னாப்பிரிக்காவில் கண்டுபிடிக்கப்பட்ட 3,106 காரட் கல்லினன் (Cullinan) வைரத்திற்குப் பிறகு இது வரை கண்டுபிடிக்கப்பட்ட மிகப்பெரிய வைரம் இதுவாகும்.

பொட்ஸ்வானா தலைநகர் கபரோனிலிருந்து 500 கிலோ மீற்றர் தொலைவில் கெய்ரோ சுரங்கம் உள்ளது.

முன்னதாக 2019ஆம் ஆண்டில், இதே சுரங்கத்தில் 1,758 காரட் செவாலோ வைரம் கண்டுபிடிக்கப்பட்டது.

இதை பிரெஞ்சு பேஷன் நிறுவனமான Louis Vuitton வாங்கியது. எனினும், அதன் விலையை வெளியிடவில்லை.

முன்னதாக 2017ஆம் ஆண்டில், பொட்ஸ்வானாவின் கெய்ரோ சுரங்கத்தில் 1,111 காரட் லெசிடி லாரோனா வைரம் கண்டுபிடிக்கப்பட்டது.

இதை ஒரு பிரித்தானிய நகைக் கடைக்காரர் ரூ.444 கோடிக்கு வாங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது.

# கனடாவில் துப்பாக்கிச் சூடு நடத்தினார்களாம் 12 வயது சிறுமி உள்ளிட்ட 3 சிறுவர்கள் கைது

கனடாவில் துப்பாக்கி சூட்டு சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் 12 வயது சிறுமி உள்ளிட்ட மூன்று சிறுவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.


ஒன்றாறியோவின் கேம்பிரிட்ஜ் பகுதியில் கடந்த வாரம் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் நபர் ஒருவர் காயமடைந்திருந்தார்.

இந்த துப்பாக்கிச் சூட்டு சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் 12 வயதுடைய சிறுமி உள்ளிட்ட மூன்று இளையவர்களை வோட்டர்லூ பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மூன்று சிறுவர்களும் அதிகாலை 2.30 மணி அளவில் மேற்படி ஆணின் காரில் ஏறிச் சண்டையிட்டனர் எனவும் இதன் போது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதாகவும் பொலிஸார் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இந்த சம்பவத்தில் 22 வயதான இளைஞர் ஒருவர் காயமடைந்துள்ளார்.

இந்தத் துப்பாக்கிச் சூடு திட்டமிட்ட அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.




இந்தச் சம்பவத்தில் 12 வயது சிறுமியொருவரும் 14 வயது சிறுமி ஒருவரும் 17 வயது சிறுவன் ஒருவனும் தொடர்புபட்டுள்ளனர் எனவும் மூவரையும். தாங்கள் கைது செய்துள்ளனர் எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்தச் சிறுவர்களது வீடுகளில் நடத்தப்பட்ட சோதனையின் போது துப்பாக்கி ஒன்றும் மீட்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். இந்தச் சிறுவர்கள் கொள்ளை மற்றும் ஆயுதக் குற்றச் செயல்களில் ஈடுபட்டிருந்தனர் எனப் பொலிஸார் குற்றம் சுமத்தியுள்ளனர்.





# தியேட்டரில் திடீரென தீப் பற்றிய அலைபேசி

கனடாவில் திரையரங்கில் திரைப்படம் பார்த்துக் கொண்டிருந்த சிறுமியின் அலைபேசி திடீரெனத் தீப்பற்றிக் கொண்டது.

கனடாவின் ஒன்றாரியோ மாகாணத்தின் கேம்பிரிட்ஜில் 11 வயதான சிறுவனின் பயன்படுத்திய அலைபேசியே இவ்வாறு தீப்பிடித்துக் கொண்டுள்ளது.

இந்த சம்பவத்தில் எவருக்கும் காயங்கள் ஏற்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

எனினும் இந்த சம்பவமானது பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தி இருக்கலாம் என சிறுவனின் தாய் கவலை வெளியிட்டுள்ளார்.

சிறுவன் கையில் வைத்திருந்த அலைபேசி தவறுதலாக திரையரங்கின் ஆசன இடுக்கில் விழுந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இதனைத் தொடர்ந்து அலைபேசி தீ பற்றி கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது.

அலைபேசியும் இருக்கையும் மட்டுமே இந்த விபத்தில் பாதிக்கப்பட்டன எனத் தெரிவிக்கப்படுகிறது.

அலைபேசியின் லித்தியம் பட்டரி தீப்பற்றிக் கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.



இரசயான தாக்கம் காரணமாக இவ்வாறு பட்டரி தீ பற்றி கொண்டிருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அலைபேசிகளை பயன்படுத்தும் போது உரிய சார்ஜர்களை மட்டும் பயன்படுத்துமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

# கனடாவில் தேடப்படுபவர் தொடர்பில் தேசிய ரீதியில் பிடிவிறாந்து உத்தரவு

பாரிய குற்றச்செயல்களுடன் தொடர்புடைய நபருக்கு கனடா தழுவிய பிடிவிறாந்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

28 வயதான ஜார்ஜ் செப்பு என்ற நபரே இவ்வாறு தேடப்பட்டு வருகின்றார். இந்த நபர் றொரன்டோ பெரும்பாக பகுதிக்கு அடிக்கடி செல்பவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

நீதிமன்ற உத்தரவுகளை மீறி செயல்பட்டார் என அந்த நபர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

மத்திய கிழக்கை பூர்வீகமாக கொண்ட இந்த நபர் மாநிறமானவர் எனவும் 5.8 அங்குலம் உயரமுடையவர் எனவும் 121 பவுண்ட்ஸ் எடையுடையவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இவர் தாக்குதல் சம்பவம் ஒன்றுடன் தொடர்புடைய குற்ற குற்றச்சாட்டில் மூன்றாண்டு சிறை தண்டனை அனுபவித்து வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த சந்தேக நபர் தொடர்பில் ஏதேனும் தகவல்கள் தெரிந்தால் பொலிஸாருக்கு அறிவிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த நபருக்கு எதிராக நாடு தழுவிய அடிப்படையில் பிறப்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.





# கனடாவில் மாற்றுத்திறனாளிகளுக்கு உணவு பாதுகாப்பின்மைப் பிரச்சினை

கனடாவில் மாற்றுத்திறனாளிகள் அதிக அளவில் உணவு பாதுகாப்பின்மைப் பிரச்சினையை எதிர்நோக்குகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கனடிய புள்ளி விவரவியல் திணைக்களம் இது தொடர்பான தகவலை வெளியிட்டுள்ளது.

மாற்றுத்திறனாளிகள் ஏனையவர்களை விடவும் உணவு பாதுகாப்பின்மை பிரச்சினைகளினால் இரண்டு மடங்கு பாதி பாதிக்கப்படுகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கனடாவில் மாற்றுத்திறனாளிகள் மத்தியில் 26.4வீத உணவு உணவு பாதுகாப்பின்மை காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

சாதாரண பொதுமக்கள் மத்தியில் இந்த வீதம் 12.5 ஆக காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, உணவிற்கான தட்டுப்பாடு, தரமான உணவின்மை, உணவின் அளவு குறைவு, உணவு வேளைகளை தவிர்த்தல் போன்ற பல்வேறு வழிகளில் உணவு பாதுகாப்பின்மை நிலவுவதாக தெரிவிக்கப்படுகிறது.




# மில்டன் பகுதியில் வீடு ஒன்றினுள் புகுந்து கொள்ளை நான்கு முகமூடி நபர்கள் ஆயுதங்களுடன் கைவரிசை

கனடாவில் மில்டன் பகுதியில் உணவு விநியோகிப்பவர்களைப் போன்று தோன்றி வீடு ஒன்றுக்குள் புகுந்து ஆயுதமுனையில் கொள்ளையிட்ட நான்கு பேரைப் பொலிஸார் தேடி வருகின்றனர்.

ஆயுதங்களை கையில் வைத்திருந்த போதிலும், இந்த நபர்கள் துப்பாக்கிச் சூடு எதனையும் நடத்தவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த கொள்ளை சம்பவத்தின் போது வீட்டில் இருந்த ஒரு ஆண் தாக்கப்பட்டுக் காயப்படுத்தப்பட்டுள்ளார். அவருக்கு உயிர் ஆபத்து இல்லாத காயங்கள் ஏற்பட்டுள்ளன எனவும் இந்த நபர் வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

திட்டமிட்ட அடிப்படையில் இந்த வீடு கொள்ளையிடப்பட்டுள்ளதாக பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

முகமூடி அணிந்த நான்கு பேர் இந்த கொள்ளை சம்பவத்துடன் தொடர்பு பட்டிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் கொள்ளைச் சம்பவம் தொடர்பில் ஏதேனும் தகவல்கள் இருந்தால் வழங்குமாறு பொலிஸார் பொதுமக்களிடம் கோரியுள்ளனர்.




# ஸ்கார்பரோவில் தாத்தா, பாட்டியிடம் இருந்து குழந்தையைக் கடத்த முயன்ற நபர் சிக்கினார்

ஒன்ராரியோ, ஓகஸ்ட் 23

குழந்தையை தள்ளு வண்டியில் வைத்துத் தள்ளிச் சென்ற தாத்தா, பாட்டியிடம் இருந்து குழந்தையைத் தள்ளு வண்டியுடன் பறித்துக் கடத்த முயன்ற 29 வயது நபர் ஒருவர் ஸ்கார்பரோவில் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஓகஸ்ட் 21ஆம் திகதி மாலை 4:30 மணியளவில் டான்ஃபோர்ட் அவென்யூவின் வடக்கே பார்மசி அவென்யூ மற்றும் டீஸ்டேல் பிளேஸ் பகுதியில் இந்தச் சம்பவம் குறித்துத் தமக்கு அழைப்பு வந்ததாக றொரன்டோ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பாதிக்கப்பட்ட நபர் சந்தேக நபரைத் துரத்திச் சென்று தாக்கிய போது அவர் தள்ளு வண்டியுடன் குழந்தையை விட்டு விட்டு ஓட்டம் பிடித்தார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர் அப்பகுதியில் இருந்து தப்பிச் சென்றார், ஆனால் பதிலளித்த அதிகாரிகள் சிறிது நேரத்தில் அவரை அருகில் கண்டுபிடித்துக் கைது செய்துள்ளனர்.

தாத்தா பாட்டிக்கு உயிருக்கு ஆபத்தான காயங்கள் ஏற்பட்டுள்ளன எனவும், குழந்தைக்கு உடல் ரீதியாக எந்த பாதிப்பும் ஏற்படவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.




# றொரன்டோ இளைஞனின் மீது பயங்கரவாதக் குற்றச்சாட்டுகள்!

ஒன்ராரியோ, ஓகஸ்ட் 23

றொரன்டோ பெரும்பாகத்தைச் சேர்ந்த ஒரு சந்தேக நபருக்கு எதிராக பயங்கரவாதக் குற்றச்சாட்டுகளை கனேடியத் தேசியப் பொலிஸார் பதிவு செய்துள்ளனர்.

நீண்ட விசாரணையின் பின்னர் இந்தக் குற்றச்சாட்டுகளை சுமத்தியுள்ளனர் எனக் கனேடிய தேசிய பொலிஸார் தெரிவித்துள்ளனர்..

குற்றம் சாட்டப்படும் போது சந்தேக நபரின் வயது காரணமாக, அவர் இளைஞர் குற்றவியல் நீதிச் சட்டத்தின் விதிமுறைகளின் கீழ் பெயரிடப்படவில்லை.

கனடாவில் தடை செய்யப்பட்ட பயங்கரவாதக் குழுவின் நடவடிக்கைகளில் இவர் பங்கேற்றார் எனக் கூறப்படுகிறது.

மற்றொரு நபரை பயங்கரவாதக் குற்றச் செயல்களில் ஈடுபட இவர் ஆலோசனை வழங்கினார் எனவும் கனேடியத் தேசியப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேக நபர் எந்த குழுவை ஆதரித்தார் அல்லது அவரது என்ன நடவடிக்கைகள் குற்றச்சாட்டுகளுக்கு வழி வகுத்திருக்கலாம் என்பன போன்ற விவரங்கள் வெளியாக வில்லை.

டொரன்டோவைச் சேர்ந்த தந்தையும், மகனும் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புக்கு ஆதரவாக வன்முறைத் தாக்குதலை நடத்த சதி செய்தனர் எனக் குற்றம் சாட்டப்பட்ட சில வாரங்களுக்கு பின்னர் இந்த புதிய குற்றச்சாட்டுகள் குறித்த விவரம் வெளியானது.